**B**

தேர்வு எண் | | | | | | |

# SSLC இரண்டாம் திருப்புதல் பொதுத் தேர்வு - 2022

நேரம் : 3.00 மணி]

## தமிழ்

[மொத்த மதிப்பெண்கள் 100

அறிவுரைகள் : 1. அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்புகள் : (i) இவ்வினாத்தாள் ஐந்து பகுதிகளைக் கொண்டது.

(ii) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி – I (மதிப்பெண்கள் –15)

குறிப்பு : (i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 15X1=15

(ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. ‘உனதருளே பார்ப்பன் அடியேனே’ – யாரிடம் யார் கூறியது?
(அ) குலசேகராழ்வாரிடம் இறைவன் (ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்
(இ) மருத்துவரிடம் நோயாளி (ஈ) நோயாளியிடம் மருத்துவர்

2. வித்துவக்கோடு – என்னும் ஊர் உள்ள மாநிலம்
(அ) ஆந்திரா (ஆ) கேரளா (இ) தமிழ்நாடு (ஈ) கர்நாடகா

3. ‘வாடா கண்ணா’ என்று தன் மகளை தாய் அழைப்பது
(அ) பால் வழுவமைதி (ஆ) திணை வழுவமைதி (இ) இட வழுவமைதி (ஈ) மரவு வழுவமைதி

4. ‘மாளாத’ – என்ற சொல்லின் பொருள்
(அ) ஓயாத (ஆ) முறியாத (இ) தீராத (ஈ) ஆகாத

5. தன்மை, முன்னிலை, படர்க்கை என்பன ---- ஐ குறிப்பனவாகும்
(அ) மூன்று காலங்கள் (ஆ) மூன்று பால்கள் (இ) மூன்று நிலைகள் (ஈ) மூன்று இடங்கள்

6. ‘ஒரு பேனா எழுதக்கிடைக்குமா?’ என்று நீங்கள் கேட்கும்போது ‘இந்தப் பென்சிலை எடுத்துக்கொள்’ என உங்கள் நண்பன் கூறுவது
(அ) வினா எதிர் வினாதல் விடை (ஆ) உற்றது உரைத்தல் விடை
(இ) இனமொழி விடை (ஈ) உறுவது கூறல் விடை

7. அருந்துணை என்பதைப் பிரித்தால்
(அ) அருமை + துணை (ஆ) அரு + துணை (இ) அருமை + இணை (ஈ) அரு + இணை

8. ‘பொருள்கோள்’ என்பது சொற்களை பொருளுக்கு ஏற்றவாறு சேர்த்து அல்லது ---- பொருள் கொள்வதாகும்
(அ) உருவாக்கி (ஆ) எழுதி (இ) மாற்றி (ஈ) திருத்தி

9. கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன?
(அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால் (ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்
(இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால் (ஈ) அங்கு வறுமை இல்லாததால்

10. மருத நிலப்பகுதிக்கு அழகு சேர்ப்பன
(அ) புல்வெளிகள் (ஆ) விலங்கினங்கள் (இ) நீர் நிலைகள் (ஈ) மரம் செடிகள்

11. இளவேனிற் காலம் என்பது
(அ) சித்திரை, வைகாசி (ஆ) ஆனி, ஆடி (இ) ஆவணி, புரட்டாசி (ஈ) ஐப்பசி, கார்த்திகை

பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை
அருத்துவதும் ஆவிக்கு அருந்துணையாய் இன்பம்
பொருத்துவதும் கல்வியென்றே போற்று.

12. “மருளை அகற்றி” என்பதில் ‘மருள்’ என்ற சொல்லின் பொருள்
(அ) மயக்கம் (ஆ) மகிழ்ச்சி (இ) மனத்திட்பம் (ஈ) இருள்

13. இப்பாடலில் "மதி" என்ற சொல் குறிப்பது

(அ) பண்பு (ஆ) பணிவு (இ) அறிவு (ஈ) மகிழ்வு

14. "கல்வியென்றே" என்ற சொல்லை பிரிக்கக் கிடைப்பது

(அ) கல்வி + என்றே (ஆ) கல்வி + யென்றே (இ) கல்வி + அன்றே (ஈ) கல்வி + யன்றே

15. இப்பாடலில் பெருமைப்படுத்தப்படுவது

(அ) தமிழ் (ஆ) அறிவியல் (இ) கல்வி (ஈ) இலக்கியம்

## பகுதி – II (மதிப்பெண்கள் 18)

### பிரிவு 1

குறிப்பு : **எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளி.** **4x2=8**

**21–வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

16. **விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.**

அ) தமிழர், பண்டைய நாட்களிலிருந்தே அறிவியலை வாழ்வியலோடு இணைத்துக் காணும் இயல்புடையவர்கள்

ஆ) "கம்பன் இசைத்த கவியெல்லாம் நான்" என்று பாரதி பெருமைப்படுகிறார்.

17. செய்குதம்பி பாவலரின் கல்வி பற்றிய கருத்துக்களில் இருந்து இரண்டு முழக்கத் தொடர்களை எழுதுக.

18. கம்பனைப் பற்றிய புகழ்மொழிகள் இரண்டினை எழுதுக.

19. உறங்குகின்ற கும்பகன்ன "எழுந்திராய் எழுந்திராய்"
காலதூதர் கையிலே "உறங்குவாய் உறங்குவாய்"
கும்பகன்னனை என்ன சொல்லி எழுப்புகிறார்கள்? எங்கு அவனை உறங்க சொல்கிறார்கள்?

20. **கீழ்வரும் தொடர்களில் பொருந்தாத கருப்பொருளைத் திருத்தி எழுதுக.**

அ) உழவர்கள் மலையில் உழுதனர்

ஆ) முல்லைப் பூச்செடியைப் பாரத்தவாரே பரதவர் கடலுக்குச் சென்றனர்.

21. 'உலகு' என நிறைவுறும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு 2

குறிப்பு : **எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **5x2=10**

22. **கலைச்சொற்கள் தருக.**

அ) **Terminology** ஆ) **Intellectual**

குறிப்பு : செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா

**தனிப்பெயர்களை எழுதுக.**

அ) மாடுகள் ஆ) செங்கற்கள்

23. தன்மைப் பெயர்களை அட்டவணைப்படுத்துக?

24. "எய்ட் தேர்ட்டி பஸ் ஐ மிஸ் பண்ணிட்டேன்டா, ஃபிரண்டை பைக்ல ஸ்கூல்ல டிராப் பண்ண சொல்லி இருக்கேன். ஸ்கூலுக்கு நைன் தேர்ட்டிக்கு ரீச் ஆயிடுவேன்னு சார்கிட்ட சொல்லிடு"....

**அயல்மொழிச் சொற்களை நீக்கி சரியான தமிழ்ச் சொற்களை இட்டு பத்தியை சரிசெய்க**

**25.** உறங்குவாய் – பகுபத உறுப்பிலக்கணம் தருக.

**26.** கொண்டு கூட்டு பொருள்கோள் – குறிப்பெழுதுக.

**27.** **பொருத்தமான இடங்களில் நிறுத்தக் குறியிடுக.**

பகலவன் பட்டொளி இராமனின் நீலமேனி ஒளியில் பட்டு இல்லையெனும்படி மறைந்து விட இடையே இல்லையெனும் படியான நுண்ணிய இடையாள் சீதையொடும் இளையவன் இலக்குவனொடும் போனான் அவன் நிறம் மையோ பச்சை நிற மரகதமோ மறிக்கின்ற நீலக்கடலோ கார்மேகமோ ஐயோ ஒப்பற்ற அழியாத அழகினை உடைய வடிவு கொண்டவன் இராமன்

**28.** **சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.**

மரம், சந்தனம், கொடி, முல்லை, காடு, மணம்.

## பகுதி – III (மதிப்பெண்கள் 18)

### பிரிவு 1

குறிப்பு : **எவையேனும் இரண்டு வினாக்களுக்குச் சுருக்கமாக விடையளிக்கவும்.** **2x3=6**

29. **உரைப்பத்தியைப் படித்து வினாக்குளக்கு விடை தருக.**

ஆழமும் பெரிய அலைகளையும் உடைய கங்கை ஆற்றைக் கடந்து செல்வார்களா? "யானைகள் கொண்ட சேனையைக் கண்டு, புறமுதுகு காட்டி விலகிச் செல்கின்ற வில்வீரனோ நான்! தோழமை என்று ராமர் சொன்ன

சொல், ஒப்பற்ற சொல் அல்லவா? தோழமையை எண்ணாமல் இவர்களை கடந்து போகாவிட்டால் அற்பனாகிய இந்த வேடன் இறந்திருக்கலாமே என உலகத்தார் என்னைப் பழி சொல்லமாட்டார்களா?

அ) கங்கை ஆற்றினை ஏன் கடந்து செல்ல முடியாது?

ஆ) உலகத்தார் எவ்வாறு பழிப்பர் என வேடன் கூறுகிறார்?

இ) வீரர்கள் புறமுதுகு காட்டுவதற்கான காரணமாக சுட்டப் பெறுவது என்ன?

30. அறிவினா, அறியாவினா, ஐயவினா – ஆகியவற்றிற்கு எடுத்துக்காட்டுகள் தருக.

31. "தண்டலை மயில்களாட தாமரை விளக்கந் தாங்க' – இடம் சுட்டிப் பொருள் தருக.

**பிரிவு 2**

குறிப்பு : **எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **2x3=6**

**34–வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

32. **செயற்கை அறிந்த கடைத்தும் – உலகத்**
**தியற்கை அறிந்து செயல்**

அ) அடி எதுகை சொற்களை எடுத்தெழுதுக.

ஆ) திருவள்ளுவர் ஒரு செயலை எவ்வாறு செய்ய வேண்டும் எனக் கூறுகிறார்?

இ) "இயற்கை" என்ற சொல்லைக் கொண்டு தொடர் ஒன்றை உருவாக்குக.

33. மருத்துவர், மருத்துவம், மருத்துவமனை ஆகியவற்றின் அக்கால, இக்கால நிலைகள் பற்றி மூன்று தொடர்கள் எழுதுக.

34. **அடிபிறழாமல் எழுதுக.**

அ) "வெய்யோன் ஒளி தன் மேனியில்" எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடல் எழுதுக.

**(அல்லது)**

ஆ) "வாளால் அறுத்துச்" எனத் தொடங்கும் குலசேகராழ்வாரின் பெருமாள் திருமொழி பாடல்.

**பிரிவு 3**

குறிப்பு : **எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** **2x3=6**

35. "என்னிடம் பாரதிதாசன் கவிதைகள் இரண்டு படிகள் உள்ளன. உன்னிடம் பாரதிதாசனின் கவிதைகள் இருக்கிறதா?" – வினா வகையினையும், விளக்கத்தையும் எழுதுக.

36. முறை நிரல் நிறை பொருள்கோள் – எடுத்துக்காட்டுடன் விளக்குக.

37. **பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்**
**பொருளல்ல தில்லை பொருள்.** – இக்குறட்பாவினை அலகிட்டு வாய்ப்பாடு தருக.

**பகுதி – IV (மதிப்பெண்கள் 25)**

குறிப்பு : **அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **5x5=25**

38. அ) **நயங்களைப் பாராட்டி எழுதுக.**

நிலாவையும் வானத்து மீனையும் காற்றையும்
நேர்பட வைத்தாங்கே
குலாவும் அமுதக் குழம்பைக் குடித்தொரு
கோல வெறிபடைத்தோம்;
உலாவும் மனச்சிறு புள்ளினை எங்கணும்
ஓட்டி மகிழ்ந்திடுவோம்;
பலாவின் கனிச்சுளை வண்டியில் ஓர் வண்டு
பாடுவதும் வியப்போ?

–பாரதியார்

**(அல்லது)**


ஆ) கல்வியே எல்லாம் தரும் – என்பதை கா.ப.செய்குதம்பி பாவலரின் "நீதிவெண்பா" வழி விளக்குக.

39. (அ) கொரோனா பெருந்தொற்று ஊரடங்கு காலத்தில் பெற்றோர் உற்றோர் நலன்களுக்காக உங்கள் நேரத்தினை செலவிட்டதை விவரித்து நண்பனுக்குக் கடிதம் எழுதுக.

**(அல்லது)**

(ஆ) "பள்ளி விளையாட்டு விழா நிறைவுற்றப்பின், விளையாட்டு மைதானத்தின் நிலை பற்றியும் தூய்மையைப் பராமரித்தல் நிலை பற்றிய தங்கள் ஆலோசனைகளையும் தலைமை ஆசிரியருக்கு கடிதமாக எழுதுக.

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41. திருவாரூர் மாவட்டம் – நன்னிலம், வள்ளலார் நகர், சேக்கிழார் தெரு 210 ஆம் இலக்க வீட்டில் வசித்து வரும் இனியவன் மகள் யாழினி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் படித்து வருகிறார். அவர் விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் உறுப்பினராகச் சேர்ந்து வாள்வீச்சு விளையாட்டில் பயிற்சி பெற விரும்புகிறார். தேர்வர் தம்மை யாழினியாகக் கருதி கொடுக்கப்பட்டுள்ள உறுப்பினர் சேர்க்கைப் படிவத்தை நிரப்புக.

42. (அ) இந்தியாவில் மக்கள் தொகை "பெருக்கம்" என்ற நிலையில் இருந்து "வெடிப்பு" என்ற நிலைக்கு மாற்றம் பெற்று உள்ளது. "முப்பது கோடி முகமுடையாள்" என பாடிய பாரதியின் கவிதை வரிகளை நாளும் நினைவு கூர்ந்தே வருகிறோம். நூறு ஆண்டுகளில் நூற்று முப்பத்தாறு கோடி மக்கள் தொகையினை எட்டி உள்ளோம். நிலப்பரப்பினை விரிவு செய்ய இயலாத நிலையில் மக்கள் பயன்படுத்துகின்ற பொருட்கள் – கழிவுகள் – குப்பைகள் காணுமிடமெல்லாம் நிறைந்து கிடக்கின்றன. இவற்றை அகற்றுவது சவாலானப் பணியாகவே உள்ளது. மிகுந்து ஓடும் கழிவு நீர் ஓடைகள், வீதியெங்கும் வீசி எறியப்படும் நெகிழிக் குப்பைகள், எப்போதும் புகைந்து கொண்டே இருக்கும் குப்பை மேடுகள் – இவைகளை காணும் போது உங்கள் மனதில் ஏற்படும் வினாக்கள் என்னென்ன? அவற்றிற்கான தீர்வுகள் என்னென்ன? என்பதை பட்டியலிடுக.

**(அல்லது)**

(ஆ) மொழிப்பெயர்க்க:

**Therukoothu is, as its name indicates, a popular form of theatre performed in the streets. It is performed by rural artists. There are more songs in the play with dialogues improvised by the artists on the spot. Artists dress themselves with heavy costumes and bright makeup. Koothu is very popular among rural areas.**

## பகுதி – V (மதிப்பெண்கள் 24)

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்கவும். 3x8=24

43. (அ) சந்தக் கவிதையில் சிறக்கும் கம்பன் – என்ற தலைப்பில் இலக்கிய உரை எழுதுக.

**(அல்லது)**

(ஆ) "தமிழ் நீதி நூல் – திருக்குறள்" – எனும் தலைப்பில் தங்கள் மனம் கவர்ந்த பத்து திருக்குறளை ஆய்வு செய்க.

44. (அ) உடல் நோயைத் தீர்க்கும் மருத்துவத்திற்கும் உள்ளத்து நோய் தீர்க்கும் கடவுள் பற்றிற்கும் உள்ள ஒற்றுமைகளை குலசேகராழ்வார் வழி நின்று விளக்குக.

**(அல்லது)**

(ஆ) "கல்வியே நலம் தரும் செல்வம்" என்பதனை நீதி வெண்பா வழியாக செய்குதம்பி பாவலர் வழி நின்று விளக்குக.

45. குறிப்புகளைப் பயன்படுத்தி கட்டுரை எழுதுக.

(அ) முன்னுரை – திண்ணைப் பள்ளிக்கூடம் – அரசுப் பள்ளிகள் – மேல்நிலைக் கல்வி – கல்லூரி பல்கலைக் கழகங்கள் – அறிவியல் தொழிற்நுட்பப் பயன்பாடு – கல்வி இணை செயல்பாடுகள் – இலவச படிப்புதவிப் பொருட்கள், நிதி உதவிகள், மாணவர் மேம்பாடு – முடிவுரை.

**(அல்லது)**

(ஆ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதித் தலைப்பிடுக.

முன்னுரை – செய்திகள் அறிதல் – பயன்பாடு – செய்திகள் பெறும் வகைகள் – செய்தித்தாள்கள் – வார மாத இதழ்கள் – வானொலிப் பயன்பாடு குழு விவாதங்கள் – வாழ்வியல் மாற்றங்கள் – வாசிப்பை நேசிப்போம் – இல்லம் தோறும் நூலகம் – முடிவுரை.

## பத்தாம் வகுப்பு – தமிழ் – இரண்டாம் திருப்புதல் தேர்வு – 2022

## விடைக்குறிப்பு

### பகுதி – I

WWW.TAMIZHCHITTU.BLOGSPOT.COM

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

| | | |
|---|---|---|
| 1 | ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார் | 1 |
| 2 | ஆ) கேரளா | 1 |
| 3 | அ) பால் வழுவமைதி | 1 |
| 4 | இ) தீராத | 1 |
| 5 | ஈ) மூன்று இடங்கள் | 1 |
| 6 | இ) இனமொழி விடை | 1 |
| 7 | அ) அருமை+துணை | 1 |
| 8 | இ) மாற்றி | 1 |
| 9 | ஈ) அங்கு வறுமை இல்லாததால் | 1 |
| 10 | இ) நீர் நிலைகள் | 1 |
| 11 | அ) சித்திரை, வைகாசி | 1 |
| 12 | அ) மயக்கம் | 1 |
| 13 | இ) அறிவு | 1 |
| 14 | அ) கல்வி+என்றே | 1 |
| 15 | இ) கல்வி | 1 |

### பகுதி – II பிரிவு – 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.**

**21 –ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்கவும்.**

| | | |
|---|---|---|
| 16 | **(பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக)**<br>அ) தமிழர் எத்தகு இயல்புடையவர்கள்?<br>ஆ) பாரதி எவ்வாறு பெருமைப்படுகிறார்? | 2 |
| 17 | **(பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக)**<br>♦ அருளைப் பெருக்குவோம்! ♦ அறிவைத் திருத்துவோம்! ♦ மயக்கம் அகற்றுவோம்! ♦ அறிவைத் தெளிவாக்குவோம்! ♦ கல்வியைக் கற்போம்! ♦ கல்வியைப் போற்றுவோம்! | 2 |
| 18 | ♦ கல்வியில் பெரியவர் கம்பர் ♦ கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்<br>♦ விருத்தம் என்னும் ஒண்பாவிற்கு உயர் கம்பன் (ஏதேனும் இரண்டு மட்டும்) | 2 |
| 19 | ♦ உம்முடைய பொய்யான வாழ்வு எல்லாம் இன்றிலிருந்து இறங்குவதற்குத் தொடங்கிவிட்டது என்று சொல்லி எழுப்புகிறார்கள்.<br>♦ காலனுக்குத் தூதரானவர் கையில் படுத்து உறங்கச் சொல்கிறார்கள். | 2 |
| 20 | **(பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக)**<br>♦ உழவர்கள் வயலில் உழுதனர். WWW.TAMIZHCHITTU.BLOGSPOT.COM<br>♦ நெய்தல், தாழைப்பூவைப் பார்த்தவாறே பரதவர் கடலுக்குச் சென்றனர். | 2 |
| 21 | குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்<br>சுற்றமாச் சுற்றும் **உலகு**<br>WWW.TAMIZHCHITTU.BLOGSPOT.COM | 2 |

www.tamizhchittu.blogspot.com

| | | |
|---|---|---|
| **பிரிவு – 2**<br>**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்** | | |
| 22 | அ) கலைச்சொல் ஆ) அறிவாளர் WWW.TAMIZHCHITTU.BLOGSPOT.COM | 2 |
| 23 | ♦ நான் ♦ யான் ♦ நாம் ♦ யாம் (பொருத்தாமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக) | 2 |
| 24 | எட்டு முப்பது பேருந்தை தவறவிட்டுட்டேன். நண்பரை இருசக்கர வாகனத்தில் பள்ளியில் விடச் சொல்லி இருக்கேன். பள்ளிக்கு ஒன்பது முப்பதுக்கு வந்திடுவேன் என்று ஆசிரியரிடம் சொல்லிடு. | 2 |
| 25 | உற்குவாய்=உறங்கு+வ்+ஆய்<br>உறங்கு – பகுதி வ் – எதிர்கால இடைநிலை<br>ஆய் – முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி | 2 |
| 26 | ஒரு செய்யுளில் பல அடிகளில் சிதறிக்கிடக்கும் சொற்களைப் பொருளுக்கு ஏற்றவாறு ஒன்றோடொன்று கூட்டிப் பொருள்கொள்வது கொண்டுகூட்டுப் பொருள்கோளாகும். | 2 |
| 27 | பகலவன் பட்டொளி இராமனின் நீலமேனி ஒளியில் பட்டு இல்லையெனும்படி மறைந்துவிட, இடையே இல்லையெனும்படியான நுண்ணிய இடையாள் சீதையொடும், இளையவன் இலக்குவனொடும் போனான். அவன் நிறம் மையோ? பச்சைநிற மரகதமோ? மறிக்கின்ற நீலக்கடலோ? கார்மேகமோ? ஐயோ! ஒப்பற்ற அழியாத அழகினை உடைய வடிவு கொண்டவன் இராமன். | 2 |
| 28 | (பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக)<br>♦ சந்தனமரம் ♦ கொடிமுல்லை ♦ சந்தனமணம் ♦ சந்தனக்காடு ♦ முல்லைக்கொடி | 2 |
| **பகுதி – III. பிரிவு – 1**<br>**எவையேனும் இரண்டு வினாக்களுக்குச் சுருக்கமாக விடையளிக்கவும்.** | | |
| 29 | அ) ஆழமும் பெரிய அலைகளையும் உடையது.<br>ஆ) அற்பனாகிய இந்த வேடன் இறந்திருக்கலாமே என உலகத்தார் பழிப்பர் .<br>இ) யானைகள் கொண்ட சேனைகள் கண்டு. | 3 |
| 30 | (பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக)<br>அறிவினா – இந்தக் கவிதையின் பொருள் யாது? என ஆசிரியர் மாணவரிடம் கேட்பது.<br>அறியாவினா – இந்தக் கவிதையின் பொருள் யாது? என மாணவர் ஆசிரியரிடம் கேட்பது.<br>ஐயவினா – இச்செயலைச் செய்தது மங்கையா? மணிமேகலையா? | 3 |
| 31 | **இடம்:** கம்பர் இயற்றிய கம்பராமாயணத்தில் பாலகாண்டத்தில் நாட்டுப்படலத்தில் இடம்பெற்றுள்ளது.<br>**பொருள்:** குளிர்ந்த சோலைகளில் மயில்கள் அழகுற ஆடு, விரிதாமரை மலர்கள் விளக்குகள் ஏற்றியது போல் மருதம் வீற்றிருக்கிறது. | 3 |
| **பிரிவு – 2**<br>**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.**<br>**34 –ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.** | | |
| 32 | அ) செயற்கை – தியற்கை<br>ஆ) ஒரு செயலைச் செய்வதற்குரிய முறைகளை நூல் வழியாக அறிந்திருப்பினும், உலகியல் நடைமுறைகளை அறிந்து செயல்பட வேண்டும்.<br>இ) **இயற்கை**யை நாம் ஓம்ப வேண்டும்.<br>(பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக) | 3 |

www.tamizhchittu.blogspot.com

| | | |
|---|---|---|
| 33 | (பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக)<br>♦ அக்காலத்தில் நாடியைப் பிடித்து நோய் கண்டறிந்தனர்.<br>♦ சித்த வைத்தியம் சிறந்த மருத்துவமாக கருதப்பட்டது.<br>♦ இக்காலத்தில் ஏராளமான நோய்களும் மருத்துவ முறைகளும் பெருகிவிட்டன. | 3 |
| 34 | அ) வெய்யோனொளி தன்மேனியின் விரிசோதியின் மறையப்<br>பொய்யோவெனு மிடையாளொடு மிளையானொடும் போனான்<br>மையோமர கதமோமறி கடலோமழை முகிலோ<br>ஐயோவிவன் வடிவென்பதொ ரழியாவழ குடையான்<br>ஆ) வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்<br>மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்<br>மீயாத் துயர்தரினும் வித்துவக் கோட்டம்மா! நீ<br>ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே | 3 |

**பிரிவு – 3**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.**

| | | |
|---|---|---|
| 35 | ♦ கொடை வினா.<br>♦ பிறருக்கு ஒரு பொருளைக் கொடுத்து உதவும் பொருட்டு வினவுவது கொடை வினா. | 3 |
| 36 | செய்யுளில் எழுவாயாக அமையும் பெயர்ச்சொற்களை அல்லது வினைச்சொற்களை வரிசையாக நிறுத்தி, அவை ஏற்கும் பயனிலைகளையும் அவ்வரிசைப்படியே நிறுத்திப் பொருள் கொள்ளுதல் முறை நிரல்நிறைப் பொருள்கோள் ஆகும்.<br>அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை WWW.TAMIZHCHITTU.BLOGSPOT.COM<br>பண்பும் பயனும் அது<br>இக்குறளில் அன்பு, அறன் என்ற இரு சொற்களை வரிசைப்படுத்தி, அவற்றிற்குரிய விளைவுகளாக பண்பு, பயன் என்று வரிசைப்படுத்தி உள்ளார். அவற்றை இல்வாழ்க்கையின் பண்பு, அன்பு என்றும் அதன் பயன், அறன் என்றும் பொருள்கொள்ள வேண்டும். எனவே, அன்புக்குப் பண்பும் அறத்துக்குப் பயனிலைகளாக – நிரல்நிறையாக – நிறுத்திப் பொருள்கொள்வதால், இப்பாடல் முறைநிரல்நிறைப் பொருள்கோள் எனப்படும். | 3 |

37 (3)

| வ.எண் | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1 | பொரு/ளல் | நிரை/நேர் | புளிமா |
| 2 | லவ/ரைப் | நிரை/நேர் | புளிமா |
| 3 | பொரு/ளா/கச் | நிரை/நேர்/நேர் | புளிமாங்காய் |
| 4 | செய்/யும் | நேர்/நேர் | தேமா |
| 5 | பொரு/ளல்/ல | நிரை/நேர்/நேர் | புளிமாய்காய் |
| 6 | தில்/லை | நேர்/நேர் | தேமா |
| 7 | பொருள் | நிரை | மலர் |

**பகுதி – IV**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**

| | | |
|---|---|---|
| 38<br>அ | **(பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக)**<br>**திரண்ட கருத்து**<br>நிலாவையும் வானத்து விண்மீன்களையும் காற்றையும் ஒரு நேர்க்கோட்டில் வைத்துப் பார்ப்போம். அந்த அழகுக் காட்சியைக் கண்டு அமுதக் குழம்பைக் குடிப்போம். | 5 |

| | | |
|---|---|---|
| | ஆனந்தவெறி கொள்வோம். அந்த அழகுக்குள்ளே நம் மனப்பறவையை ஓட்டி உலாவரக் கண்டு மகிழ்வோம். பலாச்சுளைகள் அடைத்து வைக்கப்பட்ட வண்டிக்குள் சென்ற ஓர் வண்டு ஆச்சரியப்பட்டுப் பாடுவதில் வியப்பொன்றும் இல்லை.<br>**எதுகை நயம்**<br>பாடலில் அடிகள் தோறும் இரண்டாவது எழுத்து ஒன்றி வருவது எதுகை ஆகும்.<br>நிலாவையும் – குலாவும் – உலாவும் – பலாவின்<br>**இயைபுநயம்**<br>பாடலில் அடிகள் தோறும் கடைசி எழுத்து ஒன்றிவருவது இயைபு ஆகும்.<br>வெறிபடைத்தோம் – மகிழ்ந்திடுவோம்<br>**அணிநயம்**<br>இப்பாடலில் உருவக அணி பயின்று வந்துள்ளது. மனத்தை சிறு பறவையாக கவிஞர் உருவகப்படுத்தியுள்ளார். | |
| 38<br>ஆ | **(பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக)** WWW.TAMIZHCHITTU.BLOGSPOT.COM<br>கல்வியே எல்லாம் தரும்<br>கற்றவர் வழி அரசு செல்லும் என்கிறது சங்க இலக்கியம். தோண்டும் அளவு ஊறும் நீர்போலக் கற்கும் அளவு அறிவு சுரக்கும் என்கிறது திருக்குறள். கல்வியைப் போற்றுவதைப் புறநானூற்றுக் காலத்திருந்து தற்காலம்வரை தொடர்கின்றனர் தமிழர். பூக்களை நாடிச் சென்று தேன் பருகும் வண்டுகளைப் போல, நூல்களை நாடிச் சென்று அறிவு பெறவேண்டும்.<br>அருளினைப் பெருக்கி, அறிவைச் சீராக்கி, மயக்கம் அகற்றி, அறிவுக்குத் தெளிவு தந்து, உயிருக்கு உரிய துணையாய் இன்பம் சேர்ப்பது கல்வியே ஆகும். எனவே அதைப் போற்றக் காக்க வேண்டும். செல்வத்தில் சிறந்த செல்வம் கல்விச்செல்வம் ஆகும். | 5 |
| 39<br>அ | முகவரி, நாள்<br>விளித்தல்<br>கருத்துரை<br>இப்படிக்கு<br>உறைமேல்முகவரி | 5 |
| ஆ | விடுநர்<br>பெறுநர் WWW.TAMIZHCHITTU.BLOGSPOT.COM<br>பொருள்<br>விளித்தல்<br>இப்படிக்கு<br>இடம், நாள்.<br>உறைமேல்முகவரி | 5 |
| 40 | (பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக)<br>அலைபேசி அமைதியாய் வந்தது<br>ஆரவாரமாய் நம் வாழ்வில் நுழைந்தது<br>இயற்கை வாழ்வை இயந்திரமயமாக்கியது<br>ஈடில்லா நேரங்களை இழப்புகளாக்கியது<br>திறன்பேசிக்கு அடிமையாகிவிட்டோம் | 5 |

www.tamizhchittu.blogspot.com

| | | |
|---|---|---|
| 41 | **படிவம் (பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக)** | 5 |
| 42 | (அ) **(பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக)**<br>ஏன் மக்கள் நெகிழிகளை அதிகமாகப் பயன்படுத்துகின்றனர்?<br>ஏன் மக்கள் குப்பைகளை வீதிகளில் கொட்டுகின்றனர்?<br>சுகாதாரம் சார்ந்த விழிப்புணர்வை ஏற்படுத்த வேணடும்.<br>குப்பை மேலாண்மை குறித்த கருத்தரங்கை நடத்த வேண்டும்.<br>மக்களுக்கு நெகிழிப் பயன்பாடு குறித்து விளக்க வேண்டும். | 5 |
| | (ஆ) தெருக்கூத்து என்பது நாட்டுப்புற வீதிகளை மேடையாக அமைத்து நிகழ்த்தப்படும் கலை நிகழ்ச்சியாகும். கிராமப்புற கலைஞர்களைக் கொண்டு நிகழ்த்தப்படுகிறது. நிகழ்விடத்திலேயே அதிகமான பாடல்களுடன் உரையாடல்களை இணைத்து மேம்பட்ட முறையில் கலைஞர்கள் கூத்தினை நிகழ்த்துவார்கள். மிகுந்த எடையுள்ள பளபளக்கும் வண்ண ஆடைகளால் அலங்காரம் செய்து கொள்வார்கள். கிராமப்புறங்களில் தெருக்கூத்து மிகவும் பிரபலமானதாகும். | 5 |

பகுதி – V

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். WWW.TAMIZHCHITTU.BLOGSPOT.COM

| | | |
|---|---|---|
| 43<br>அ | **சந்தக் கவிதையில் சிறக்கும் கம்பன் – இலக்கிய உரை**<br>தண்டலை மயில்களாட தாமரை விளக்கந்தாங்க,<br>கொண்டல்கள் முழவினோங்க குவளைக்கண் விழித்து நோக்க,<br>தெண்டிரை யெழினி காட்ட தேம்பிழி மகரயாழின்<br>வண்டுகளி னிதுபாட மருதம் வீற்றிருக்கும் மாதோ,<br>என்ற பாடலைப் படிக்கும் போது இயற்கை கொலுவீற்றிருக்கும் காட்சியைப் பெரிய கலைநிகழ்வே நடப்பதான தோற்றமாகக் கம்பன்கவி காட்டுகிறது. அப்பாடலில் எத்தனை நயங்கள் வெளிப்படுகின்றன. இலக்கியச் சுவை, சொற்சுவை, பொருட்சுவை, கற்பனைச், சுவை, என அனைத்தும் உள்ளன.<br>கவிதை, கவிஞன் மூலம் தன்னையே வெளிப்படுத்திக் கொள்கிறது. அது எப்படி வருகின்றதோ அதை மாற்றினால் அழகு குன்றும். மீண்டும் மீண்டும் வரும் சந்தம் உணர்வுகளை நம்முள் செலுத்துகிறது. உள்ளம் சூறையாடப்படுகிறது.<br>கவிதைகள் மூலம் பெறும் இன்பங்கள் எத்தனையோ! அதில் ஒன்று சந்த இன்பம். பொருள் புரியாவிடினும் சந்த இன்பம் மகிழ்ச்சியூட்டுகிறது. 'ஓசை தரும் இன்பம் உவமையிலா இன்பமடா' என்று பாரதி சொல்வதை இதில் உணரமுடியும்.<br>ஆழ நெடுந்திரை ஆறு கடந்து இவர் போவாரோ?<br>வேழ நெடும் படை கண்டு விலங்கிடும் வில் ஆளோ? என குகன் கோபமாகக் கூறுவதுபோல் இப்பாடலில் சொற்கள் இடம்பெற்றுள்ளன. இப்பாடலை வேகமாகப் படித்தால் நமக்கும் கோபம் கொப்பளிக்கும். அதற்குக் காரணம் கம்பனின் சந்தமே ஆகும்.<br>உறங்குகின்ற கும்பகன்ன! உங்கள் மாய வாழ்வெலாம்<br>இறங்குகின்றது! இன்று காண் எழுந்திராய்! எழுந்திராய்!<br>கறங்கு போல வில்பிடித்த கால தூதர் கையிலே,<br>உறங்குவாய், உறங்குவாய்! இனிக் கிடந்து உறங்குவாய்!<br>எனும் பாடலில் உலக்கையால் மாறிமாறி இடிக்கும் ஒத்த ஓசையில் அமைந்த சந்தம், இடிக்கும் காட்சியைக் கண்முன் எழுப்புகிறது. "கல்வியில் பெரியவர் கம்பர்", | 8 |

www.tamizhchittu.blogspot.com 

| | | |
|---|---|---|
| | "கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்" போன்ற முதுமொழிகளுக்கு உரியவர் கம்பர். கம்பர் கவிதையைப் படிக்கும்போது தற்காலத்தில் ஒரு கம்பன் வருவானா? என ஏங்குகிறோம். கம்பனின் கவிதைகள் கன்னித் தமிழோடு பலகாலம் நிலைக்கும் எனக்கூறி என்னுடைய உரையை முடிக்கின்றேன். நன்றி, வணக்கம். | |
| 43<br>ஆ | **(பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக)**<br>**தமிழ் நீதி நூல் – திருக்குறள்**<br>உலக மொழிகளுள் தலை சிறந்ததாகவும் செம்மை நிறைந்ததாகவும் விளங்கும் மொழி தமிழ்மொழி. தமிழ்மொழியில் காலந்தோறும் ஏராளமான இலக்கியங்கள் தோன்றியுள்ளன. மனிதனைச் செம்மைப்படுத்த நீதி இலக்கியங்கள் தோன்றின. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றி, இன்றளவும் தலைசிறந்து விளங்கும் நீதி நூலாக திருக்குறள் உள்ளது.<br>எம்மக்களுக்கும் எக்காலத்திற்கும் ஏற்ற கருத்துகளை திருக்குறள் எடுத்துரைக்கின்றது.<br>(ஏதேனும் பத்து திருக்குறள் பற்றி ஆய்வு செய்திருக்க வேண்டும்) | 8 |
| 44<br>அ | **(பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக)**<br>உடலில் ஏற்படும் நோய்கள்<br>நோய் தீர்க்கும் மருத்துவம்<br>உள்ளத்தில் ஏற்படும் நோய்கள் (பேராசை, தீய எண்ணங்கள் .......)<br>கடவுள் மீதுள்ள பற்றால் நல்வழியில் நடத்தல் | 8 |
| 44<br>ஆ | **(பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக)**<br>கல்வியே நலம் தரும் செல்வம்<br>கல்வி – சிறப்புகள் – அழியாத செல்வம் – நலம் தரும் செல்வம் | 8 |
| 45<br>அ | முன்னுரை<br>பொருளுரை WWW.TAMIZHCHITTU.BLOGSPOT.COM<br>மேற்கோள்கள்<br>முடிவுரை | 8 |
| 45<br>ஆ | முன்னுரை<br>பொருளுரை<br>மேற்கோள்கள்<br>முடிவுரை | 8 |

www.tamizhchittu.blogspot.com

**ஆக்கம்:**

## தமிழ்ச்சிட்டு வலைப்பூ.

**(பத்தாம் வகுப்பு – தமிழ் – மாதிரி வினாக்கள், ஆன்லைன் தேர்வு, பயிற்சி வினாக்கள்)**

**www.tamizhchittu.blogspot.com**